## மார்ச் - 30 - வியாழன்

புனித களிமாக் அருளப்பர்

தங்களை விடுவித்த இறைவனை மறந்தனர்: எகிப்தில் பெரியன புரிந்தவரை மறந்தனர்: திபா. 106:21

---

### முதல் வாசகம்: ஏசேக்கியல் 32 : 7 – 14

நான் உன்னை இல்லாமல் ஆக்கும்போது, வானங்களை நான் மூடுவேன் அவற்றின் விண்மீன்களை இருளச் செய்வேன் கதிரவனை மேகத்தால் மறைத்திடுவேன் நிலாவும் அதன் ஒளியைக் கொடாது. வானத்தின் ஒளி விளக்குகள் எல்லாம் உனக்கு இருண்டு போகச் செய்து, உன் நாட்டின்மீது இருள் கவியச் செய்வேன், என்கிறார் தலைவராகிய ஆண்டவர். நீ அறியாத அன்னிய நாட்டினரிடையே நான் உனக்கு அழிவைக் கொண்டுவருகையில், பல மக்களினங்களின் இதயங்களை கலக்கமுறச் செய்வேன். பல்வேறு மக்களினங்களை உன்னைக் குறித்துத் திகிலடையச் செய்வேன். நான் என் வாளை அவர்களின் மன்னர்கள்முன் வீசுகையில், உன்னைக் குறித்து அவர்கள் நடுக்கமுறுவர். நீ வீழ்ச்சியுறும் நாளில், அவர்களுள் ஒவ்வொருவரும் தம் சொந்த உயிர் குறித்து நடுங்குவர். ஏனெனில், தலைவராகிய ஆண்டவர் இவ்வாறு கூறுகிறார் பாபிலோன் மன்னனின் வாள் உன்மீது பாயும். மக்களினங்களில் மிகக் கொடியவரான வலியோரின் வாள்களினால் உன் படைத்திரளை வீழ்ச்சியுறச் செய்வேன். அவர்கள் எகிப்தின் பெருமையைக் குலைத்து அதன் மக்கள்திரளை அழிப்பர். நீர்நிலைகளின் ஓரத்திலுள்ள அதன் கால்நடைகளை எல்லாம் நான் அழித்து விடுவேன். மனித காலடியோ குளம்போ அவற்றை இனிக் குழப்பாது. அப்போது நான் நீர்நிலைகளைத் தெளியச் செய்து, அவற்றின் ஆறுகளை எண்ணெய் போல் ஓடச்செய்வேன், என்கிறார் தலைவராகிய ஆண்டவர்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உமது இரக்கத்திற்கேற்ப என்னை நினைவு கூரும்

### நற்செய்தி : யோவான் 5 : 31 – 47

அக்காலத்தில் இயேசு யூதர்களை நோக்கிக் கூறியதாவது: ”என்னைப்பற்றி நானே சான்று பகர்ந்தால், என் சான்று செல்லாது. என்னைப்பற்றி சான்று பகர வேறு ஒருவர் இருக்கிறார். என்னைப் பற்றி அவர் கூறும் சான்று செல்லும் என எனக்குத் தெரியும். யோவானிடம் ஆளனுப்பி நீங்கள் கேட்டபோது அவரும் உண்மைக்குச் சான்று பகர்ந்தார். மனிதர் தரும் சான்று எனக்குத் தேவை என்பதற்காக அல்ல் நீங்கள் மீட்புப் பெறுவதற்காகவே இதைச் சொல்கிறேன். யோவான் எரிந்து சுடர்விடும் விளக்கு. நீங்கள் சிறிது நேரமே அவரது ஒளியில் களிகூர விரும்பினீர்கள். ”யோவான் பகர்ந்த சான்றை விட மேலான சான்று எனக்கு உண்டு. நான் செய்து முடிக்குமாறு தந்தை என்னிடம் ஒப்படைத்துள்ள செயல்களே அச்சான்று. நான் செய்துவரும் அச்செயல்களே தந்தை என்னை அனுப்பியுள்ளார் என்பதற்கான சான்றாகும். ”என்னை அனுப்பிய தந்தையும் எனக்குச் சான்று பகர்ந்துள்ளார். நீங்கள் ஒருபோதும் அவரது குரலைக் கேட்டதுமில்லை அவரது உருவைக் கண்டதுமில்லை. அவரது வார்த்தையும் உங்களுக்குள் நிலைத்திருக்கவில்லை ஏனெனில், அவர் அனுப்பியவரை நீங்கள் நம்பவில்லை. மறைநூல் வழியாக நிலைவாழ்வு கிடைக்கும் என எண்ணி அதனைத் துருவித் துருவி ஆய்ந்து பார்க்கிறீர்களே! அம் மறைநூலும் எனக்குச் சான்று பகர்கிறது. வாழ்வு பெறுமாறு என்னிடம் வர உங்களுக்கு விருப்பம் இல்லை. ”மனிதர் தரும் பெருமை எனக்குத் தேவையில்லை. உங்களை எனக்குத் தெரியும். உங்களிடம் இறையன்பு இல்லை. நான் என் தந்தையின் பெயரால் வந்துள்ளேன். ஆனால் என்னை நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. வேறொருவர் தம் சொந்தப் பெயரால் வருவாரானால் அவரை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள்.
கடவுள் ஒருவரே. அவர் தரும் பெருமையை நாடாது, ஒருவர் மற்றவரிடமிருந்து பெருமை தேடிக்கொள்கிறீர்களே! உங்களால் எப்படி என்னை நம்ப இயலும்? தந்தையின் முன்னிலையில் உங்கள் மேல் குற்றம் சுமத்தப்போகிறவன் நான் என நினைக்காதீர்கள். உங்கள் சார்பாக நிற்பார் என நீங்கள் எதிர்பார்க்கும் மோசேயே உங்கள் மேல் குற்றம் சுமத்துவார். நீங்கள் மோசேயை நம்பியிருந்தால் என்னையும் நம்பியிருப்பீர்கள். ஏனெனில் அவர் என்னைப்பற்றித் தான் எழுதினார். அவர் எழுதியவற்றை நீங்கள் நம்பவில்லை என்றால் நான் சொல்லுபவற்றை எவ்வாறு நம்பப் போகிறீர்கள்?

**தியானம் :** இயேசுவின் எதிரிகள் அவர் மீது பலவிதமான குற்றச்சாட்டுக்களை சுமத்தினார்கள். இயேசு எந்த அதிகாரத்தோடு போதிக்க துணிந்தார் என்பது அவர்கள் எழுப்பிய ஒருமுக்கியமான கேள்வியாகும் அதற்கு இயேசு கூறியபதில் தம்முடைய அதிகாரம் தந்தை இறைவினிடமிருந்து வருகின்றது என்றார். இயேசு செய்த அதிசயங்களே இயேசு யார் என்று வெளிப்படுத்துகின்றன என்று திருமுழுக்கு யோவான் சான்று பகர்ந்தார். மனிதர் சிலசமயங்களில் உண்மையின் அடிப்படையில் தீர்ப்பிட மறுக்கின்றார்கள் தம் கண் முன்னால் நிகழ்வதை ஏற்கத் தயங்குகின்றார்கள். உண்மையை ஏற்றுக் கொண்டால் அந்த அடிப்படையில் தங்கள் கருத்துக்களை மாற்ற வேண்டிய தேவை எழும் என்பதைக் கண்டுமனிதர் அஞ்சுகின்றார்கள். இயேசு இதை தம் எதிரிகளுக்கு சுட்டிக் காட்டுகின்றார். அவர்கள் தங்கள் கடின மனதைத் தவிர்த்து இளகியமனம் கொண்டவர்களாக, அடைபட்ட உள்ளத்தை சிறிது திறந்து விட்டால் உண்மையைக் கண்டுகொள்வார்கள் என இயேசு உணர்த்துகின்றார். மனிதர் தம் சொந்தகருத்துக்களின் அடிப்படையில் இயேசு மதிப்பிடுவதற்குப் பதிலாக கடவுளின் பார்வையில் இயேசு எந்நிலையில் உள்ளார் என்பதைச் சிறிது கவனித்திருந்தால் இயேசுவைப் பற்றிய உண்மையை அறிந்து கொண்டிருப்பார்கள். இது இன்றைய மனிதருக்கும் ஒரு சவாலாக உள்ளது. நம்முடைய அன்றாட வாழ்வில் நாம் செய்யும் செயல்கள் நாம் கிறிஸ்தவர்கள் என்பதை மற்றவர்களுக்கு அடையாளம் காட்ட வேண்டும் அப்படிப்பட்ட வாழ்வு வாழ நாம் முன்வருவோம் ஆமென்.